யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி JAFFNA HINDU COLLEGE யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி JAFFNA HINDU COLLEGE

**JAFFNA HINDU COLLEGE**

| 43 | T | I |
|---|---|---|

**முதலாந் தவணைப் பரீட்சை - 2019**

**1st Term Examination - 2019**

| | | | |
|---|---|---|---|
| நாடகமும் அரங்கியலும் Drama and threture | | நேரம் Time | 3 மணித்தியாலம் |
| தரம் Grade | 10 | பகுதி Part | I, II |

## பகுதி - I

***1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.***

1) நாடகக்கலையின் பிரதான மூலகம்
(1) நாடக எழுத்துரு (2) நடிகன் (3) ஒப்பனை (4) பார்ப்போர்

2) அரங்கின் காண்பிய மூலகம் அல்லாதது
(1) வேட உடை (2) ஒளி (3) நடிகன் (4) இசை

3) இலக்கியம் சுவைக்கப்படுவது
(1) கேட்பதில் (2) பார்ப்பதில் (3) கற்பனையில் (4) தொட்டுணர்வதில்

4) வானொலி நாடக நடிகனுக்கு அவசியமற்றது
(1) ஒப்பனை (2) நடிப்பு
(3) குரல் (4) உணர்வு வெளிப்பாடு

5) நடிகனுக்கு வழங்கப்படுகின்ற குரல் பயிற்சிக்கு அடிப்படையான பயிற்சி
(1) சுவாசப்பயிற்சி (2) கீப்றிச் பயிற்சி
(3) கவிதை பாடல் (4) உடல்தளர்வுப்பயிற்சி

6) நடிகனின் குரல் வெளிப்பாட்டு மையங்கள்
(1) நான்கு (2) மூன்று (3) ஒன்று (4) ஐந்து

7) 'முறைமை' என்னும் நடிப்புக் கோட்பாட்டினை முன்வைத்தவர்
(1) பரதர் (2) ஸ்ரனிஸ்லவஸ்கி (3) பிரக்ட் (4) சாமுவேல் பெக்கட

8) மேடை நாடகமொன்றுக்கும் தொலைக்காட்சி நாடகமொன்றுக்குமான வேறுபாடாக கொள்ளக்கூடியது.
(1) கட்புல செவிப்புல வடிவம் (2) மனிதப் பிரச்சனைகளைப் பேசும்
(2) பாத்திரந்தாங்கல் இடம்பெறும் (4) பார்ப்போரை உடன் எதிர்கொள்ளும்

9) பின்வரும் அரங்க விளையாட்டுக்களில் வெற்றி தோல்வியின்றி விளையாடக்கூடிய அரங்க விளையாட்டு
(1) ஆடும் வீடும் (2) நண்டு றால் மீன்
(3) சின்னப் பானை பெரிய பானை (4) கந்தையாண்ண சொல்லுகிறார்



kalvi.lk

10) பின்வருவனவற்றில் கருத்துான்றல் பயிற்சியாக கொள்ளக்கூடிய அரங்க விளையாட்டு
(1) ஆடும் வீடும் (2) நண்டு றால் மீன்
(3) காகம் உயிர் பெறுதல் (4) கரடியும் கிராம மக்களும்

11) முன்னாயத்தமின்றிய அரங்கச்செயற்பாடு
(1) ஊமம் (2) அரங்க விளையாட்டு
(3) புதிதளித்தல் (4) வகிபாகமேற்றல்

12) பின்வருவனவற்றில் ஆற்றுகைக்கலை அல்லாதது
(1) நாடகம் (2) ஓவியம் (3) நடனம் (4) இசை

13) நாடகம் எதிலிருந்து தோன்றியதாக கருதப்படுகின்றது.
(1) நடனத்தில் இருந்து (2) சடங்கில் இருந்து
(3) பொம்மலாட்டத்தில் இருந்து (4) விளையாட்டுக்களில் இருந்து

14) உலக நாடக தினம் கொண்டாடப்படுவது
(1) ஜனவரி 10 (2) ஏப்ரல் 21 (3) மார்ச் 27 (4) டிசம்பர் 29

15) நாடகமொன்றினை எழுதுபவர்
(1) நெறியாளர் (2) தயாரிப்பாளர் (3) நாடக ஆசிரியர் (4) நடிகர்

16) ஆரொடு நோகேன் நாடகத்தினை எழுதியவர்
(1) குழந்தை ம. சண்முகலிங்கம் (2) பேரா. க. கணபதிப்பிள்ளை
(3) நா. சுந்தரலிங்கம் (4) பேரா.சி.மௌனகுரு

17) ‘சங்கிலி’ நாடகமானது
(1) சிறுவர் நாடகம் (2) சமூக நாடகம்
(3) வரலாற்று நாடகம் (4) நகைச்சுவை நாடகம்

18) சிறுவர் நாடகத்தின் பண்பாகக் கொள்ள முடியாதது
(1) ஆடல் பாடல் காணப்படும் (2) பஞ்ச தந்திர கதைகளாக இருக்கும்
(3) சமூகப் பிரச்சனைகளைப் பேசும் (4) விளையாட்டு அம்சங்கள் காணப்படும்

19) பின்வருவனவற்றில் சிறுவர் நாடகம் அல்லாதது
(1) கண்டறியாத கதை (2) முயலார் முயல்கிறார்
(3) விழிப்பு (4) அமைதிப்பூங்கா

20) “மொட்டைத்தலையுடன் ஒற்றைப் பிராமணன் முன் இதோ வாறானே” என்ற பாடல் இடம்பெறும் நாடகம்.
(1) பூதத்தம்பி (2) காத்தவராஜன் (3) காமன் கூத்து (4) சங்கிலியன்

21) பின்வருவனவற்றில் உணர்ச்சி வெளிப்பாட்டினை குறிப்பிடும் அபிநயம்
(1) ஆங்கீகம் (2) ஆஹார்யம் (3) வார்சீகம் (4) சாத்வீகம்

22) ‘மனித மாடு’ என்ற சிறுகதையை எழுதியவர்
(1) டானியேல் (2) டோமினிக் ஜீவா
(3) அ.செ.முருகானந்தம் (4) ம.சண்முகலிங்கம்

23) நாடகம் என்பதற்கு வழங்கப் பெற்ற பழந் தமிழ்ச்சொல்
(1) நாட்டியம் (2) கூத்து (3) விலாசம் (4) ஆடல்கதை



kalvi.lk

24) எல்லாக்கூத்து மரபுகளிலும் பயன்படுத்துப்படும் இசைக்கருவி
(1) மத்தளம் (2) உடுக்கு (3) மிருதங்கம் (4) சல்லாரி

25) ஆரொடு நோகேன் நாடகம் பேசுகின்ற விடயம்
(1) கல்வி தொடர்பானது (2) சீதனம் பற்றியது
(3) யுத்தம் பற்றியது (4) ஆடம்பர வாழ்வு பற்றியது

26) 'ஊமம்' நாடகத்தில் இடம்பெறாதது
(1) அசைவுகள் (2) உரையாடல்கள் (3) ஆடல்கள் (4) அபிநயங்கள்

27) பின்வருவோரில் மன்னார் பிரதேசத்தில் கூத்துக்கலையை வளர்த்தவர்
(1) நாகமணிப்போடி (2) பூந்தான் யோசேப்பு
(3) முருகவேள் (4) குழந்தை செபமாலை

29) பின்வரும் செயல்களில் ஆக்கியல் அசைவாகக் கொள்ளப்படக்கூடியது
(1) தண்ணீர் அள்ளுதல் (2) அணிநடை நடத்தல்
(3) வீடு கூட்டுதல் (4) வேகமாக ஓடுதல்

30) புதிதளித்தல் மூலமாக உருவாக்கப்பட்ட நாடகம்
(1) புதியதொரு வீடு (2) எந்தையும் தாயும்
(3) உயிர்த்த மனிதர் கூத்து (4) மண்சுமந்த மேனியர்

31) பின்வருவனவற்றில் அசைவுகளையே அடிப்படையாகக் கொண்ட நாடக வகை
(1) கூத்து (2) இசைநாடகம் (3) ஒப்பேறா (4) பலே

32) மேடை நாடகவெளிப்பாட்டில் நடிகனைப்போல, தொலைக்காட்சி நாடகத்தில்
(1) நடிகன் (2) எழுத்துரு (3) தொலைக்காட்சி (4) கமரா

33) நாடகமொன்றின் இலக்கிய வடிவமாகக் கொள்ளப்படக்கூடியது
(1) நடிப்பு (2) பாடல் (3) எழுத்துரு (4) உரையாடல்கள்

34) நடிகனுக்கு மிக மிக அவசியமானதென்று கூற முடியாதது
(1) குரல் வளம் (2) நடிப்பாற்றல்
(3) உணர்ச்சி வெளிப்பாட்டுத் திறன் (4) அழகான உடல்

35) 'கதவடைத்துப்பாடுதல்' என்ற செயற்பாடு தொடர்புபடும் சடங்கு
(1) வேட்டைத்திருவிழா (2) குளிர்த்தி
(3) சூரன்போர் (4) பாண்டவர் வனவாசம்

36) பெரும்பாலும் பெண் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புபடுகின்ற சடங்கு
(1) சூரன்போர் (2) குளிர்த்தி (3) பாஸ்கு (4) வேட்டைத்திருவிழா

37) திருப்பாடுகளின் நாடகங்களை தொடர்ச்சியாகப் பல வருடங்களாக மேடையேற்றி வரும் நிறுவனம்
(1) நாடக அரங்க கல்லூரி (2) திருமறைக் கலாமன்றம்
(3) செயல்திறன் அரங்க இயக்கம் (4) நடிகர் ஒன்றியம்



kalvi.lk

38) அருகிலுள்ள படத்தில் காணப்படும் நாடக ஆசிரியர்



(1) நா. சுந்தரலிங்கம்
(2) மாவை நித்தியானந்தன்
(3) குழந்தை ம. சண்முகலிங்கம்
(4) பேரா. கணபதிப்பிள்ளை

39) அருகிலுள்ள பாத்திரத்தில் வெளிப்படும் உணர்வுநிலை.



(1) சோகம்
(2) கோபம்
(3) பயம்
(4) வெட்கம்

40) இப்படத்தில் காணப்படும் நாடக வகை



(1) கூத்து
(2) இசைநாடகம்
(3) சிறுவர் நாடகம்
(4) சமூகநாடகம்

(40 x 1 = 40 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

## பகுதி II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. சுருக்கமான விடை தருக
   (1) புதிதளித்தல் என்றால் என்ன?
   (2) நடிகனின் உணர்ச்சியை வெளிப்படுத்தும் அங்கம் எது ?
   (3) எண் தொடர்பான அரங்க விளையாட்டு ஒன்று தருக?
   (4) கூத்தின் நெறியாளர் எப்பெயரினால் அழைக்கப்படுவார் ?
   (5) பிள்ளை அழுத கண்ணீர் நாடகத்தினை எழுதியவர் யார் ?
   (6) சூரன் போர் எத் தெய்வ வழிபாட்டோடு தொடர்புடைய சடங்கு ?
   (7) வகிபாகமென்றால் என்ன?
   (8) தர்க்கத்தரு என்னால் என்ன?
   (9) அரங்கின் கட்புல மூலகம் **இரண்டு** தருக ?
   (10) குழந்தை சண்முகலிங்கம் எழுதிய நாடகங்கள் **இரண்டு** தருக ? (12 புள்ளிகள்)

2. (1) நாடகம் என்றால் என்ன? (3 புள்ளிகள்)
   (2) நாடகத்தின் சிறப்பியல்புகள் 6 தருக? (3 புள்ளிகள்)
   (3) மேடை நாடகமொனறிற்கும் தொலைக்காட்சி நாடகமொன்றுக்குமான ஒற்றுமை வேற்றுமைகளைத் தருக.? (6 புள்ளிகள்)

3. (1) அசைவுகள் என்றால் என்ன? (3 புள்ளிகள்)
   (2) அசைவுகளின் மூன்று வகைகளைத் தருக ? (3 புள்ளிகள்)
   (3) நாடகத்தில் அசைவுகளின் பயன்பாடுகளைத்தருக.? (6 புள்ளிகள்)

4. (1) அரங்க விளையாட்டு என்றால் என்ன என்பதனை விளக்குக? (3 புள்ளிகள்)
   (2) அரங்க விளையாட்டுக்களின் நன்மைகளை பட்டியலிடுக ? (4 புள்ளிகள்)
   (3) கருத்துான்றல் பயிற்சியாக அமையத்தக்க அரங்க விளையாட்டு ஒன்றினை விபரிக்குக? (5 புள்ளிகள்)

5. (1) சடங்கு என்றால் என்ன? (2 புள்ளிகள்)
   (2) சடங்குகளில் காணப்படும் நாடகப்பண்புகளை விளக்குக? (5 புள்ளிகள்)
   (3) ‘வேட்டைத்திருவிழா’ அல்லது ‘குளிர்த்தி’ சடங்கின் ஆற்றுகை முறையை விபரிக்குக? (5 புள்ளிகள்)

6. “வாய்மையே வெல்லும்” என்ற கருப்பொருளில் 15 நிமிடங்கள் நடிக்கத்தக்க நாடகமொன்றினை எழுதுக? (15 புள்ளிகள்)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

### எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page